அறிக்கையிடத்தக்கது

இந்திய உச்ச நீதிமன்றம்

2019 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர்கள் திரு. ஏ.எம்.கான்வில்கர் மற்றும் திரு. தினேஷ் மஹேஸ்வரி

உரிமையியல் மேல்முறையீடு எண். 5889/2009

ராதா பாய் .....மேல்முறையீட்டாளர்(கள்)

எதிராக

ராம் நாராயண் மற்றும் சிலர் ... .எதிர்மனுதாரர்(கள்)

தீர்ப்பு

ஏ.எம்.கான்வில்கர், ஜே.

1. பிலாஸ்பூரில் அமைந்துள்ள சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தில் (சுருக்கமாக உயர்நீதிமன்றம்) எதிர்மனுதாரர்கள் - அசல் 1 முதல் 4 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு எண் 84/2002 அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கினை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவு உறுதிப்படுத்தப்பட்டு 12/2/2007 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் உத்தரவினை ஆட்சேபித்து மேல்முறையீட்டாளரால் இந்த மேல் முறையீடு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது

2. வழக்கின் தரப்பினர்கள் கீழ்கண்டவாறு தொடர்புடையவர்கள் ஆவார்கள்



3. சக்தி தாலுக்கா பர்ரா கிராமத்தில் அமைந்துள்ள வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏ-அட்டவணை சொத்தானது சார்தா சான்னகு என்பவரின் மகனான சஹ்தியோ சான்னகு என்பவருக்கு சொந்தமான அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்து என்று குறிப்பிட்டு மேல் முறையீட்டாளரால் பிலாஸ்பூர் மாவட்டம், சக்தி முதல் வகுப்பு உரிமையியல் நீதிபதி நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சஹ்தியோ மித்தாக்ஸரா சட்டங்களுக்கு உட்பட்ட ஒரு இந்து ஆவார். தாவா சொத்து மூதாதையர் சொத்து என்ற முறையில் சஹ்தியோ விற்கு கிடைத்துள்ளது. அதில் சஹ்தியோவின் மகன்களான ஜனக்ராம் மற்றும் பிலராம் ஆகியோர்கள் கூட்டுப் பங்கு உரிமையாளர்கள் என்ற முறையில் கூட்டு பங்கினை பெற்றுள்ளார்கள். மேல் முறையீட்டாளரின் தந்தையான சாகேப்லால் ஜனக்ராமின் மகன் ஆவார். அவருக்கு சோனு என்ற மற்றொரு மகனும் உள்ளார் (அவர் இந்த மேல்முறையீடு நிலுவையில் இருந்த போது இறந்து போன அசல் நான்காம் பிரதிவாதியாவார்) மேல் முறையிட்டாளரின் தந்தையான சாகேப்லால் அவரது தந்தையான ஜனக்ராம் மற்றும் தாத்தாவான சஹ்தியோ ஆகியோர்களுக்கு முன்பாகவே இறந்துவிட்டார். சஹ்தியோ 1965 ஆம் ஆண்டிலும் ஜனக்ராம் 1982 ஆம் ஆண்டிலும் இறந்துள்ள நிலையில் சாகேப்லால் 1957 ஆம் ஆண்டு இறந்துள்ளார். சாகேப்லால் அவரது மனைவி லட்சுமின்பாய் மற்றும் அவரது மகளான மேல்முறையீட்டாளர் ராதாபாய் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு சென்றுள்ளார் இந்நிலையில் மேல்முறையீட்டாளர் அவரது தந்தையான சாகேப்லால் மூலமாக தாவா சொத்தில் பங்கு பெற அவருக்கு உரிமை இருப்பதாக கூறி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் தாயார் 1985 ஆம் ஆண்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே 1984 ஆம் ஆண்டு இறந்துவிட்டார்.

4. மேல் முறையீட்டாளரின் வழக்கு யாதெனில் மேல் முறையீட்டாளரின் தாயார் இறந்த பிறகு அவர் பர்ரா கிராமத்திற்கு வந்து கிராம நிர்வாக அலுவலரிடம் தாவா சொத்தினை

அவரது பெயருக்கு மாற்றம் செய்து தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். அதற்கு 21/07/1979 ஆம் தேதி ஜனக்ராம் எழுதிக் கொடுத்துள்ள பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் படி சோனுவின் மூன்று மகன்களான ராம் நாராயணன் (1 ம் பிரதிவாதி), ஜெய நாராயண் (2 ம் பிரதிவாதி),மற்றும் ரோஹித் குமார்(3ம்பிரதிவாதி)ஆகியோர் பேருக்கு தாவா சொத்து மாற்றம் செய்யப்பட்டு விட்டதாக பதில் கிடைத்துள்ளது. மேலும் 1965 ஆம் ஆண்டு சஹ்தியோ இறந்த பிறகு அவரது இரண்டு மகன்களான ஜனக்ராம் மற்றும் பிலராம் ஆகியோர்களுக்கிடையே 1967ஆம் ஆண்டு பாகப்பிரிவினை நடைபெற்று அதன் அடிப்படையில் தாவா சொத்து ஜனக்ராமிற்கு தனிப்பட்ட பங்காக ஒதுக்கப்பட்டு அதன் அடிப்படையில் அவர் தாவாசொத்தின் பூரண உரிமையாளர் ஆகி அந்த உரிமையின் அடிப்படையில் அவரது மூன்று பேரன்களுக்கு (தற்போது இறந்து போய்விட்ட அவரது மகன் சோமுவின் மகன்களான 1முதல் 3பிரதிவாதிகள்) கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விவரமும் தெரிய வந்துள்ளது.

5. மேற்படி விபரங்கள் குறித்து தெரிய வந்தவுடன் 1985 ஆம் ஆண்டு மேல் முறையீட்டாளரால் கீழ்கண்ட பரிகாரங்கள் கோரி விளம்புகை மற்றும் சுவாதீனத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"14.): வாதியால் கீழ்க்கண்டவாறு பரிகாரங்கள் கோரப்படுகிறது.

i): நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரிய சொத்தின் சுவாதீனத்தை பொறுத்து வாதிக்கு தீர்ப்பாணை வழங்க வேண்டும்.

I(a): பிரச்சனைக்குரிய சொத்தினை பாகப்பிரிவினை செய்து பாதி பங்கினை வாதிக்கு வழங்க வேண்டும் மற்றும் அதன் நில வருவாய் குறித்து தனியே கணக்கிடப்பட உத்தரவிட வேண்டும்.

ii): வழக்கிற்கான செலவு தொகை வாதிக்கு வழங்கப்பட வேண்டும்.

iii) வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்து தகுதியானது மற்றும் அவசியமானது என்று நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் பரிகாரங்கள் வாதிக்கு வழங்கப்பட வேண்டும்.

6. எதிர்மனுதாரர்கள்-பிரதிவாதிகள் வாதியின் வழக்கினை எதிர்த்து பதில் உரை தாக்கல் செய்துள்ளார்கள் இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரைகளின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஒன்பது எழுவினாக்களை வனைந்துள்ளது.

<u>எழுவினாக்கள் மற்றும் முடிவு</u>

(1): சஹ்தியோ இறந்த பிறகு கூட்டு மற்றும் ஒருங்கிணைந்த சொத்தைப் பொறுத்து ஜனக்ராம் மற்றும் பிலராம் ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதா?

ஆமாம்.

(2): மேற்படி பாகப்பிரிவினையில் பிரச்சனைக்குரிய சொத்து ஜனக்ராமால் பெறப்பட்டதா?

நிரூபிக்கப்படவில்லை.

(3) 1982 ஆம் ஆண்டு வரை பிரச்சனைக்குரிய சொத்து ஜனக்ராம், லட்சுமின்பாய் மற்றும் வாதியின் கூட்டு மற்றும் ஒருங்கிணைந்த சொத்துக்களாக இருந்து வந்துள்ளதா?

எழுவினா இரண்டிற்கு எதிர்மறையாக தீர்வு காணப்பட்டுள்ளதால் விரிவாக பரிசீலனை செய்யப்படவில்லை.

(4): பிரச்சனைக்குரிய சொத்தினை விற்பனை செய்ய ஜனக்ராமிற்கு உரிமை

இல்லையா?

(5): 21/07/1997 ஆம் தேதியிட்ட கிரைய பத்திரம் சட்ட விரோதமான செல்ல தகாத ஆவணமா?

(6): பிரச்சனைக்குரிய சொத்தின் சுவாதீனத்தை பெற வாதி உரிமை உடையவரா?

(7) : பரிகாரம் மற்றும் செலவு தொகைகள்.

வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கின் செலவுத் தொகைகளை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்க வேண்டும்

கூடுதல் எழுவினாக்கள்

(8): பிரச்சனைக்குரிய சொத்தில் பாதி பங்கு பெற வாதி உரிமை உடையவரா?

நிரூபிக்கப்படவில்லை

(9): வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதில்லையா?

நிலைக்கத்தக்கது

7. விசாரணை நீதிமன்றம் வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்களை பரிசீலனை செய்து 24/11/2000 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின்படி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

8. மேற்படி தீர்ப்பால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் சத்தீஸ்கர் மாநிலம், பிலாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள சக்தி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் 5-A/2001 ல் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு நீதிமன்றம் 22/01/2002 ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின்படி

விசாரணை நீதிமன்றத்தின் முடிவினை மாற்றியுள்ளது. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள செயல்படுத்தக்கூடிய உத்தரவு கீழ் வருமாறு

"26.): மேற்கூறிய விமர்சன மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்க்கண்ட விளைவிற்கு தீர்ப்பாணை வழங்கப்படுகிறது.

i): மேல் முறையிட்டாளரின் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதின் விளைவாக 24/11/2000 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பானை மற்றும் எதிர்த்து உரைக்கப்பட்ட தீர்ப்புரை ரத்து செய்யப்படுகிறது.

ii) மேல் முறையீட்டாளரின் மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டதின் விளைவாக வாதி/மேல் முறையீட்டாளரின் வழக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள ஏ அட்டவணை சொத்தில் பாதி பங்கினை பிரித்து தனியாக சுவாதீனம் பெற வாதிக்கு உரிமை உண்டு என்றும் அதற்கேற்ப நில வருவாய் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

iii) வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள ஏ அட்டவணை தீர்ப்பானையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

iv) பதில் அளிக்கும் வாதிகள்/எதிர்மனுதாரர்கள் வழக்கின் சொந்த செலவுகளை ஏற்பதுடன் வாதி/மேல்முறையிட்டாளரின் வழக்கு செலவுகளையும் ஏற்க வேண்டும்.

v) வழக்கறிஞர் கட்டணம், தீர்ப்பானையில் சரிபார்த்த பிறகு செலுத்தவேண்டியது ₹300.

vi) அதன்படி தீர்ப்பாணை வனையப்படலாம்.

9. எதிர்மனுதாரர்கள்- அசல் 1 முதல் 4 பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தில் இரண்டாம் மேல் முறையீடு வழக்கு எண் 84/2002இல் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளனர். இரண்டாம் மேல்முறையீட்டிணை விசாரணைக்காக அனுமதிக்கும் போது உயர் நீதிமன்றம் இரண்டு சட்ட கேள்விகளை வடிவமைத்துள்ளது. அவை கீழ்க்கண்டவாறு:

> "1. வாதி பெண் என்பதால் சஹ்தியோவிற்கு மட்டுமே சொந்தமான சொத்தில் பாகப்பிரிவினை பெறுவதற்கு உரிமை பெற்றுள்ளாரா? மற்றும் எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில் ஜனக்ராமிற்கு அவரது தந்தை இறந்த பிறகு பகிர்ந்து அளிக்கப்பட்டதா?
>
> 2. மறைந்த ஜனக்ராம் அவரது தந்தை சஹ்தியோவிடமிருந்து இறங்குரிமையின் அடிப்படையில் பெற்ற சொத்து 1982 ஆம் ஆண்டு ஜனக்ராம் இறந்த தேதியிலும் , 1965 ஆம் ஆண்டு சஹ்தியோ இறந்த தேதியிலும் வாதியின் பூர்வீக சொத்தாக இருந்ததா?

10. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டு நீதிமன்றம் வெளிப்படையான தவறு செய்துள்ளதாகவும் தீர்க்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டினை தவறாக பயன்படுத்தி உள்ளது என்றும் முடிவு செய்துள்ளது. உயர்நீதிமன்றம் அதனை கீழ்கண்ட வார்த்தைகளில் பரிசீலித்துள்ளது:

> " 8. இரண்டாவது மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரே விஷயம் யாதெனில் பிலராமை விலக்கி ஜனக்ராம் தனிப்பட்ட உரிமையில் தாவா சொத்தை வைத்திருந்தாரா, மற்றும் வாரிசு உரிமை விதி அல்லது எஞ்சுநர் உரிமை விதி பொருந்துமா என்பதே ஆகும்.

சஹ்தியோ இறந்த மூன்று வருடங்களுக்குப் பிறகு பாகப்பிரிவினை நடைபெற்று அதில் தாவா சொத்துக்கள் ஜனக்ராமின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. ஒரு பங்குரிமையர் அமைப்பு சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை நடைபெற்று ஒரு பங்குரிமையருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மற்றவர்களை விலக்கி அவர் தனிப்பட்ட சுவாதீனத்தில் வைக்கப்பட்டால் அவர் அந்த சொத்தில் பூரண உரிமையை பெற்று விடுகிறார். ஜனக்ராம் இறந்த பிறகே திறக்கப்படும் வாரிசு உரிமை மூலம் பாகம் பெறக்கூடிய எதிர்பார்ப்பு வாரிசு உரிமையை மட்டுமே வாதி ராதாபாய் பெற்றுள்ளார். இந்தப் பார்வையின் அடிப்படையில் 1982 ஆம் ஆண்டு ஜனக்ராம் இறப்பதற்கு முன்பே அவர் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலமாக தாவா சொத்தினை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ள நிலையில் கிரைய பத்திரம் உரிய பிரதி பிரயோஜனம் இல்லாமல் அல்லது மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்ற காரணங்களின் அடிப்படையில் மட்டுமே வாதி கேள்வி எழுப்ப முடியும். ஜனக்ராம் உயிருடன் இருந்த காலத்தில் அவரது ஏற்கனவே இறந்து போன மகன் சாகேப்லாலின் மகள் என்ற முறையில் ராதா பாய் தாவா சொத்தில் வெறும் எதிர்பார்ப்பு வாரிசு உரிமை தவிர வேறு எந்த உரிமையும் பெற்று இருக்கவில்லை. நான்காம் பிரதிவாதி சோனுவால் 21/07/1979ஆம் தேதியிட்ட கிரைய பத்திரம் ஜனக்ராமிடமிருந்து வலுக்கட்டாயமாக அல்லது உரிய பிரதிபலன் இன்றி பெறப்பட்டது என்பதை காட்டுவதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இந்தப் பார்வையின் அடிப்படையில், பாகப்பிரிவினைக்கு பிறகு மற்ற பங்குரிமையர்களை விலக்கி தாவா சொத்தினை பெற்றுள்ள ஜனக்ராமிற்கு அதனை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ய முழு உரிமை உள்ளது. வாதியான ராதாபாய் மேற்படி கிரய பத்திரம் உரிய பிரதிபலன் இல்லாமல் அல்லது வலுக்கட்டாயமாக எழுதி

வாங்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க தவறி உள்ளதால் அந்த கிரைய பத்திரத்தினை வேறு எந்த காரணங்களின் அடிப்படையிலும் எதிர்க்க முடியாது. வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களே வாதி ஜனக்ராம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்ததை பற்றி முழுவதும் அறிந்திருந்தார் என்பதை காட்டுவதாக உள்ளது. வாதியான ராதாபாய் நீதிமன்றத்தில் முன்னிலையான போதும், கேட்டுக் கொண்ட போதும் அவர் வழக்கில் சாட்சியாக சாட்சியம் அளிக்கவில்லை. இந்தப் பார்வையின் அடிப்படையில், இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு வாரிசுரிமை விதி தான் பொருந்தும் என்பதாலும் அந்த வாரிசுரிமை பிலராமுடன் நடந்த பாகப்பிரிவினையில் கிடைத்த பாகத்தின் முழு உரிமையாளரான ஜனக்ராம் இறந்த பிறகு தான் திறக்கப்படும் என்பதாலும் ராதாபாய் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தோல்வி அடையக்கூடியது என்று நான் தீர்மானமான கருத்தை கொண்டிருக்கிறேன். தாவா சொத்தின் பூரண உரிமையாளரான ஜனக்ராம், அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிரைய பத்திரம் மூலமாக விற்பனை செய்துவிட்ட தாவா சொத்தில் அவர் உயிருடன் இருந்த காலகட்டத்தில் தாவா சொத்துக்களிலோ அல்லது தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை அல்லது சுவாதீனத்திற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கோ, வாதி ராதாபாய் எவ்வித உரிமையும் பெற்றிருக்கவில்லை என்பதால் சட்ட கேள்வி 1-க்கு எதிர்மறையாக பதில் அளிக்கப்படுகிறது. சஹ்தியோ இறந்த பிறகு பங்குரிமையர் அமைப்பு சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை நடைபெற்று, அதில் ஜனக்ராம் தாவா சொத்தினை அவரது பங்காக பெற்று, அதனால் தாவா சொத்தின் முழு உரிமையாளர் ஆகியுள்ளார். இந்த பார்வையின் அடிப்படையில் பாகப்பிரிவினைக்கு பிறகு மற்ற பங்குரிமையர்களை விலக்கி ஜனக்ராமால் தாவா சொத்தில்

முழு உரிமை பெறப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு எஞ்சுநர் உரிமை விதி பொருந்தாது. எனவே தாவா சொத்து பிலராம் மற்றும் ஜனக்ராமிற்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கு பிறகு மூதாதையர் சொத்து என்ற அந்தஸ்தை இழந்து ஜனக்ராமின் தனிப்பட்ட சொத்தாக மாறிவிட்டது. இந்த வழக்கிற்கு வாரிசுரிமையர் விதி தான் பொருந்தக் கூடியது மற்றும் அந்த வாரிசுரிமை ஜனக்ராமின் இறப்பிற்குப் பிறகே திறந்திருக்கும். எனவே வெறும் எதிர்பார்ப்பு வாரிசுரிமை மட்டுமே பெற்றுள்ள ராதாபாய் ஜனக்ராமால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள கிரைய பத்திரம் உரிய பிரதிபலன் இல்லாமல் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது அல்லது 4ம் பிரதிவாதி சோனுவால் வலுக்கட்டாயமாக எழுதி வாங்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிப்பதன் மூலமே வாதியால் வெற்றி பெற முடியும் அவ்வாறு நிருபிக்க தவறினால் வழக்கு தோல்வி அடைய வேண்டும்.

9. இரண்டு சட்ட கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளதால் மேல் முறையீடு அனுமதிக்கப்படுவதற்கு தகுதியானதாகும். அதன்படி மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. பிலாஸ்பூர் மாவட்டம், சக்தி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தால் மேல்முறையீடு வழக்கு எண் 5-A/2001 ல் 02/01/2002 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்படுகிறது மற்றும் சக்தி இரண்டாம் வகுப்பு நீதிபதியால் அசல் வழக்கு எண் 90-A/88 ல் 24/11/2000 தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை."

11. மேல்முறையீட்டாளர் வாதி மறுக்க முடியாத வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையிலும் **குருபாத் கந்தப்பா மக்தும் - எதிர் - ஹிராபாய் கந்தப்பா மக்தும் மற்றும்**

சிலர்[1]என்ற வழக்கிலும் ரமேஷ் வர்மா (இறப்பு) அவரது சட்டப்பிரதிநிதிகள் மூலமாக – எதிர் - லாஜேஸ் சக்சேனா (இறப்பு) அவரது சட்டப் பிரதிநிதிகள் மூலமாக மற்றும் சிலர்[2]என்ற வழக்கிலும் இந்நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்புகளின் அடிப்படையிலும், உயர்நீதிமன்றம் எஞ்சுநர் உரிமை விதி பொருந்தாது என்றும், வாதி வெறும் எதிர்நோக்கு இறங்குரிமையர் என்றும் தீர்மானித்து வெளிப்படையான தவறு இழைத்துள்ளதாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, தாவாச் சொத்து சஹ்தியோவின் கைகளில் இருந்த மூதாதையர் சொத்து என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். 17/06/1956 ம் தேதியில் இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956 (சுருக்கமாக 1956 சட்டம்) அமுலுக்கு வந்த பிறகு சாகேப்லால் இறந்துள்ளதால் 1956 சட்டத்தின் பிரிவு 6 குறிப்பாக விளக்கம்-I இவ்வழக்கிற்கு பொருத்தக்கூடியதாகும். அதன் விளைவாக பங்குரிமையர் சொத்தைப் பொறுத்து சாகேப்லால் இறப்பதற்கு முன்பு கருத்தியல் பாகப்பிரிவினை (Notional Partition) ஏற்பட்டுள்ளது. சாகேப்லால் அவரது மனைவி லக்ஷ்மின்பாய் மற்றும் மகள் ராதாபாய் (மேல் முறையீட்டாளர்- வாதி) ஆகியோரை வாரிசாக விட்டு விட்டு சென்றுள்ளதால் பிரிவு 6 ன் வரம்புரையும் இவ்வழக்கிற்கு பொருந்தக் கூடியதாகும். அதன் விளைவாக, இறந்து போன சாகேப்லாலின் உரிமை 1956 சட்டத்தின் கீழ் இறங்குரிமையின் கீழ் பகிர்தளிக்கப்பட்டுள்ளதேயன்றி எஞ்சுநர் உரிமையால் அல்ல. சாகேப்லாலின் ஒரே உயிருடன் உள்ள வாரிசு என்ற முறையில் மேல்முறையீட்டாளர் வாதி சாகேப்லாலின் மொத்த பங்கில் உரிமை கோருகிறார்.

12. அடுத்ததாக 21/07/1979ம் தேதி ஜனக்ராமால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள கிரையப்பத்திரமானது சட்ட விரோதமானது மற்றும் மேல்முறையீட்டாளர் வாதியை கட்டுப்படுத்தக் கூடியதில்லை என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. சஹ்தியோவின் இறப்பிற்கு பிறகு பங்குரிமையர்களிடம் விடப்பட்ட மூதாதையர் சொத்தை விற்பனை செய்வதற்கு ஜனக்ராமிற்கு அதிகாரம் இல்லை. அதேபோல், இறந்து போன சாகேப்லாலின் வாரிசுகளை விட்டு விட்டு

ஜனக்ராம் மற்றும் பிலராம் இடையே நடைபெற்றுள்ள பாகப்பிரிவினையால் யாதொரு பயனும் இல்லை மற்றும் அது தாவாச் சொத்தில் வாதியின் கோரிக்கையை நிராகரிப்பதற்கு அடிப்படையாக இருக்க முடியாது. மேல் முறையீட்டாளர் - வாதிக்கு ஆதரவாக முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படவேண்டும் என்று, மேல்முறையீட்டாளரால் வேண்டுதல் செய்யப் பட்டு உள்ளது .

13. மறுபுறம், எதிர்மனுதாரர்கள்- பிரதிவாதிகள் இந்த வழக்கில் சாகேப்லால் 1957ம் ஆண்டிலேயே இறந்து விட்டதாக வாதிட்டார்கள். 1965 ஆம் ஆண்டு சஹ்தியோ இறந்த பிறகு வாரிசு உரிமை திறக்கப்பட்டு மூதாதையர் சொத்து உயிருடன் இருந்த சஹ்தியோவின் இரண்டு மகன்களான ஜனக்ராம் மற்றும் பிலராமிற்கு சமமாக கிடைத்துள்ளது. அந்த சமயத்தில் மேல்முறையீட்டாளர் - வாதி முதல் வகுப்பு வாரிசு இல்லை. மேல்முறையீட்டாளர் சஹ்தியோவின் முன்னமே இறந்து போன மகனின் மகளாக இருந்திருந்தால் அவரது கோரிக்கையை தொடர சில வாய்ப்புகள் இருந்திருக்கலாம். எனினும் மேல்முறையீட்டாளர் சஹ்தியோவின் கொள்ளுப்பேத்தி என்பதால் 1965ம் ஆண்டில் அவர் வழக்குச் சொத்தில் உரிமை கோரியிருக்க முடியாது. சட்டப்படி மேல்முறையீட்டாளரின் தந்தையான சாகேப்லால் அவரது தந்தை ஜனக்ராமின் வாழ்நாளில் சொத்தில் உரிமையைப் பெற்றிருக்கமுடியாது. அதேசமயம் சஹ்தியோவின் மறைவிற்கு பிறகு ஜனக்ராமிற்கும் பிலராமிற்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி வழக்குச் சொத்து ஜனக்ராமிற்கு தனிப்பட்ட பங்காக கிடைக்கப்பெற்று அவர் அதன் முழு உரிமையாளராகியுள்ளார். ஜனக்ராம், பங்குரிமையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் சார்பாக வைத்திருக்காமல் வழக்கு சொத்தினை தனிப்பட்ட சொத்தாக வைத்திருந்ததால், அதனை அவரது விருப்பத்திற்கேற்ப எவருக்கேனும் விற்பனை செய்யமுடியும் என்பதால் 21/07/1979 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலமாக அவரது பேரன்களுக்கு (எதிர்மனுதாரர்கள்- 1 முதல் 3 பிரதிவாதிகள்) விற்பனை செய்துள்ளார். இந்த சூழ்நிலையில், பேத்தியை வாரிசாக

கருதமுடியாது என்பதால் அவர் வழக்குச் சொத்தில் பங்கு பெற முடியாது என்பது தீர்மானிக்கப்பட்ட சட்டமாகும்.

14. மேலே குறிப்பிடப்பட்ட சமர்பிப்பை உறுதிப்படுத்த, **சந்திரகாந்தா மற்றும் சிலர் - எதிர் - அசோக்குமார் மற்றும் சிலர்[3]என்ற வழக்கில் மத்திய பிரதேச உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஹர்தியோ ராய் - எதிர் - சகுந்தலா தேவி மற்றும் சிலர்[4]மற்றும் செல்வ வரி ஆணையர், கான்பூர் மற்றும் சிலர் - எதிர் - சந்தர் சென் மற்றும் சிலர்[5]ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கூடுதலாக யுதிஷ்டர் - எதிர் -அசோக்குமார்[6]**

3 2002(3) MPLJ 576

4 (2008) 7 SCC 46

5 (1986) 3 SCC 567

6 (1987) 1 SCC 204

மற்றும் ராஜாராணி -எதிர்-தலைமை தீர்வு ஆணையர், டெல்லி மற்றும் சிலர்[7]ஆகிய வழக்குகளின் தீர்வும் மேற்கோள் காட்டப்பட்டது. இந்நீதிமன்றத்தின் தலையீடு தேவைப்படும் அளவிற்கு உயர்நீதிமன்றம் எவ்வித தவறும் இழைக்கவில்லையென்று வலியுறுத்தப்பட்டது. இந்த மேல்முறையீடு தகுதியற்றது என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

15. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சரப்ஜித் தத்தா மற்றும் எதிர்மனுதாரர்களின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மனோஜ் பிரசாத் ஆகியோர்களின் வாதம் கேட்கப்பட்டது.

16. இரு தரப்பு விவாதங்களையும் பரிசீலனை செய்வதற்கு முன்பு, வழக்கு பிரச்சனை காலத்திற்கு பொருந்தக்கூடிய 1956 சட்டத்தின் பிரிவு 6ஐ இங்கு காண்பது

பொருத்தமானதாக இருக்கும். அது கீழ்க்கண்டவாறு:

" 6. இந்த சட்டம் அமலுக்கு வந்த பிறகு ஒரு இந்து ஆண் இறந்துவிட்டால், அவர் இறக்கும்போது மிதாக்ஸரா பங்குரிமையர் அமைப்பு சொத்தில் உரிமை கொண்டிருந்தால், சொத்தின் மீதான அவரது உரிமை இந்த சட்டத்தின் படி அல்லாமல், உயிருடன் இருக்கும் பங்குரிமையர் அமைப்பின் உறுப்பினர்களிடையே எஞ்சுநர் உரிமையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும். வரம்புரையாக, இறந்தவர் அட்டவணையில் வகுப்பு-Iல் குறிப்பிடப்பட்டுள்ள பெண் உறவினரையோ அல்லது அவர் மூலம் உரிமைகோரும் அதே வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண் உறவினரையோ விட்டுச் சென்றிருந்தால், மிதாக்ஷரா

---

7 (1984) 3 SCC 619

பங்குரிமையர் அமைப்பு சொத்தில் இறந்தவரின் உரிமை எஞ்சுநர் உரிமையின் படி அல்லாமல், இந்தச் சட்டத்தின் படி உயில்வழி மரபுரிமை அல்லது உயிலற்ற மரபுரிமை ஆகியவற்றில் எது பொருந்துமோ அதன்படி பகிர்ந்தளிக்கப்படும்.

விளக்கம்.1. இந்த பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு இந்து மிதாக்ஸரா பங்குரிமையரின் சொத்தின் உரிமை, அவர் பாகப்பிரிவினை கோருவதற்கு உரிமை உடையவரா என்பதை பொருட்படுத்தாமல், அவர் இறப்பதற்கு முன் உடனடியாக பாகப்பிரிவினை நடந்திருந்தால் அவருக்கு சொத்தில் ஒதுக்கப்படும் பங்காக கருதப்பட வேண்டும்.

விளக்கம்.2: இந்தப்பிரிவின் வரம்புரையில் கண்ட எதுவும் பங்குரிமை அமைப்பிலிருந்து தாமாக வெளியேறிய ஒரு நபருக்கோ, உயிலற்ற மரபுரிமையின் படி உரிமை கோரும் அவரது எந்த வாரிசுகளுக்கோ உரிமை அளிப்பதற்காக புரிந்து கொள்ளப்படக்கூடாது.

17. மிதாக்ஸரா சட்டத்தின் கீழான பங்குரிமையர் அமைப்பு குறித்து இந்நீதிமன்றம் **ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா-எதிர்-காமந்தி ராம் (இறப்பு) குர்பக்ஸ் ராய்** மூலமாக[8]என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ளது. மேற்படி பிரசுரிக்கப்பட்ட தீர்ப்பின் பாரா5-ல் நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பரிசீலித்துள்ளது.

8(1969) 2 SCC 33

"5. மிதாக்ஸரா ஸ்கூல் இந்து சட்டத்தின் படி, இந்து கூட்டுக்குடும்பத்தின் அனைத்து சொத்துக்களும் கூட்டாண்மை நிறுவனத்தைப் போன்று அனைத்து பங்குரிமையர்களால் கூட்டு உரிமையில் வைத்திருக்கப்படும். மிதாக்ஸராவின் எழுதப்பட்ட உரை வெளிப்படையான விதிமுறைகளில் வகுத்தமைத்துள்ளது என்னவென்றால், கூட்டு குடும்பச் சொத்து கூட்டு குடும்பத்தில் தற்போது வாழ்பவர்களுக்காகவும், இதற்கு பிறகு பிறக்கப்போகிறவர்களுக்காகவும் பொறுப்புரிமை அமைப்பில் வைக்கப்படுகிறது. (பார்க்க மிதாக்ஸரா, அத்தியாயம் I. 1-27) **மிதாக்ஸரா சட்டத்தின் கீழ் பங்குரிமையர் அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்றால் : முதலாவதாக, ஒரு நபரின் மூன்றாம் தலைமுறை வரையிலான நேர்வழி ஆண் சந்ததியினர், அந்த நபரின் மூதாதையர் சொத்துக்களில் பிறப்பு உரிமையைப் பெறுகிறார்கள்.**

இரண்டாவதாக, அத்தகைய சந்ததியினர் பாகப்பிரிவினை கோருவது மூலமாக எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களது உரிமையை நிறைவேற்றிக் கொள்ள முடியும். மூன்றாவதாக, பாகம் பிரிக்கப்படும் வரை ஒவ்வொரு உறுப்பினரும், மற்ற உறுப்பினர்களுடன் கூட்டாக மொத்த சொத்து முழுவதும் உரிமையை பெற்றிருப்பார்கள். நான்காவதாக, அத்தகைய கூட்டு உரிமையின் விளைவாக, சொத்துக்களின் சுவாதீனம் மற்றும் அனுபவம் பொதுவானதாக இருக்கும். ஐந்தாவதாக, தேவைக்காக, பங்குரிமையர்களின் ஒப்புதலின்றி சொத்துக்களை விற்பனை செய்வது சாத்தியமற்றது. ஆறாவதாக, ஒரு இறந்த உறுப்பினரின் உரிமை அவரது மரணத்தால் உயிருடன் இருப்பவர்களிடம் இழக்கப்படுகிறது. மிதாக்ஸரா பள்ளியின் கீழ் பங்குரிமையர் அமைப்பு சட்டத்தால் உருவாக்கப்படுவதாகும். தத்தெடுப்பால், தத்தெடுக்கப்பட்ட மகன் அவருடைய தகப்பனாருடன் இணைந்து அவருடைய மூதாதையர் சொத்துக்களைப் பொறுத்து பங்குரிமையர் ஆவதைத் தவிர தரப்பினர்களின் செயலால் எழமுடியாது. "

(வலியுறுத்தி வழங்கப்பட்டுள்ளது)

இந்த விரிவான விளக்கம் **ஹர்தியா ராய்(**மேலே கண்டுள்ளவாறு) வழக்கில் கவனத்தில் கொள்ளப்பட்டது. இந்த விரிவான விளக்கத்தை கவனித்த பிறகு, கீழே கண்டவாறு பாரா எண்.20 முதல் 23ல் நீதிமன்றம் பரிசீலனை செய்யப்பட்டது.

"20. முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் ஒரு மிதாக்ஷரா பங்குரிமையர் அமைப்பின் உறுப்பினர் என்ற முடிவுக்கு வரவில்லை. சொத்திற்கான மூலம் சொல்லப்படவில்லை.

மேல்முறையீட்டாளர் மற்றும் மற்ற கூட்டு உரிமையாளர்களால் சொத்து என்ன விதத்தில் அனுபவம் செய்து வரப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளப்படவில்லை. தரப்பினர்களின் சமையல்கூடம் அல்லது குழப்பத்திலோ கூட்டாக இருந்தது என்று முடிவு செய்யப்படவில்லை. தரப்பினர்கள் சொத்துக்களின் கூட்டு அனுபவத்தில் இருந்தார்கள் என்பதைக் காட்டுவதற்கு வாய்மொழி சாட்சியமோ அல்லது ஆவண சாட்சியமோ தாக்கல் செய்யப்படவில்லை

21. மேல்முறையீட்டாளர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் ஒருவர் தாவாச் சொத்து மேல்முறையீட்டாளரின் தனியான அனுபவத்தில் இருந்து வருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். மேல்முறையீட்டாளரும் தனது சாட்சியத்தில், அவரும், அவருடைய மற்ற கூட்டு உரிமையாளர்களும் சொத்தின் தனித்தனி அனுபவத்தில் இருந்து வருவதாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

22. சொத்தில் ஒருவரின் உரிமையை ஒதுக்கும் நோக்கத்திற்காக, பங்குரிமையர்களிடையே அளவுகள் மற்றும் எல்லைகளின் மூலம் பாகப்பிரிவினை கண்டிப்பாக நடக்க வேண்டிய அவசியம் இல்லை. பங்குரிமையர் அமைப்பு சொத்தினை பாகப்பிரிவினை செய்வதற்கான எண்ணம் வெளிப்படுத்தப்படும்போது, ஒவ்வொரு பங்குரிமையர்களின் பங்கும் தெளிவானதாகவும், உறுதி செய்யக்கூடியதாகவும் மாறும். ஒரு பங்குரிமையரின் பங்கு தீர்மானிக்கப்பட்டவுடன், அது பங்குரிமையர் அமைப்பு சொத்து என்ற தகுதியை இழந்துவிடும். அத்தகைய நிகழ்வில் தரப்பினர்கள் சொத்தினை கூட்டு நிலச் சொத்துரிமையாளர்களாக வைத்திருக்க

மாட்டார்கள். மாறாக பொது நில சொத்துரிமையாளர்களாக வைத்திருப்பார்கள். எனவே SBI[1]வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு தற்போதைய இந்த வழக்கிற்கு பொருந்தாது.

23. ஒரு பங்குரிமையர் சொத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை எடுத்துக்கொண்டு விட்டால், அவர் அந்த பங்கின் உரிமையாளர் ஆவார் மற்றும் அதனை அவரது தனிப்பட்ட சொத்து என்ற முறையில், அவர் அடமானம் வைக்கவோ அல்லது விற்பனை செய்யவோ முடியும்.

சந்தர்சென் (மேலே கண்டுள்ளபடி) வழக்கில், இந்நீதிமன்றம் அத்தியாயம் II மற்றும் அட்டவணையின் வகுப்பு -I வாரிசுகள் உள்ளடங்கிய 1956ம் சட்டத்தின் பிரிவுகள் 4, 6 மற்றும் 8க்கு இடையேயான தொடர்பினை கருத்தில் கொண்டது. நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டது:

"10. இங்கு கேள்வி என்னவென்றால், பாகப்பிரிவினையின்போது ஒரு மகன் தனது தந்தையிடமிருந்து மரபுரிமையாக பெற்ற வருமானம் அல்லது சொத்து மகனின் இந்து கூட்டு குடும்ப வருமானமாக கருதப்பட வேண்டுமா அல்லது மகனின் தனிப்பட்ட வருமானமாக கருதப்பட வேண்டுமா என்பதேயாகும். இந்து சட்டத்திற்கு விளக்கவுரை எழுதியவர்களுக்கிடையிலும், நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலும் மகன் அவனது சொந்தக் குடும்பத்தின் கர்த்தாவைப் போல் மரபுரிமை பெறுவான் என்பதில் பிரச்சனை எதுவும் இல்லை. ஆனால் கேள்வி என்னவெனில், இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8ன் விளைவு என்ன? இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 ஆண்களின்

விஷயத்தில் வாரிசுரிமை பற்றிய பொது விதியை வகுத்துள்ளது. முதல்விதி என்னவெனில், சொத்தைப் பொறுத்து ஏற்பாடு எதுவும் செய்து வைக்காமல் இறக்கும் ஒரு இந்து ஆணின் சொத்து அத்தியாயம் II மற்றும் அட்டவணையின் வகுப்பு-Iவிதிகளின் படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வகுப்பு-Iன் ஆண் வாரிசு இருந்தால் அட்டவணையின் வகுப்பு-Iல் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அட்டவணையின் வகுப்பு-I பின்வருமாறு:

"மகன், மகள், விதவை, அம்மா, முன்னமே இறந்த மகனின் மகன், முன்னமே இறந்த மகனின் மகள், முன்னமே இறந்த மகளின் மகன், முன்னமே இறந்த மகளின் மகள், முன்னமே இறந்த மகனின் மனைவி, முன்னமே இறந்த மகனின் முன்னமே இறந்த மகனின் மகன், முன்னமே இறந்த மகனின் முன்னமே இறந்த மகனின் மகள், முன்னமே இறந்த மகனின் முன்னமே இறந்த மகனின் விதவை."

11. **முன்னமே இறந்துபோன மகனின் மகன் உள்பட மகன், மகள், போன்றவர்கள் அட்டவணையின் வகுப்பு-I ல் வாரிசுகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். ஆனால் உயிருடன் இருக்கும் மகனின் மகனான பேரன் குறிப்பாக சேர்க்கப்படவில்லை.** எனவே குறுகிய கேள்வி என்னவென்றால், அட்டவணை வகுப்பு-Iல் வாரிசு என்ற முறையில் மகன் சொத்தை பெறும்போது, அவர் தனிப்பட்ட நபர் என்ற முறையில் சொத்தைப் பெறுகிறாரா அல்லது அவர் அவரது சொந்த பிரிக்கப்படாத குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் பெறுகிறாரா என்பதேயாகும்.

12. தற்போது அலகாபாத் உயர்நீதிமன்றம் சிஐடி-எதிர்-

ராம்ரக்ஷ்பால், அசோக்குமார் வழக்கில் சொல்லப்பட்ட அறிக்கையின் விளக்கவுரையாளர்களால் கவனிக்கப்பட்ட பக்கம் 171ஐ மேற்கோள் காட்டிய பிறகு, சட்டத்தின் தெளிவாக சொற்களை விளக்கும்போது ஒரு சட்டத்தின் மூலம் அடைய முயற்சிக்கும் நோக்கங்களைப் பற்றி பரந்த மற்றும் பொதுவான தன்மையில் பரிசீலிக்க வாய்ப்பில்லை. இந்து சட்டம் குறித்த முல்லாவின் விளக்கவுரை மற்றும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 6ன் விதிகளைக் குறிப்பிட்டு கற்றறிந்த நீதிபதிகள் பரிசீலித்துள்ளனர். தந்தை தனது மகனின் கைகளில் விட்டுச் செல்லும் வணிகத்தின் சொத்துக்கள் இச்சட்டத்தின் பிரிவு 8ன் கீழ் கட்டுப்படுத்தப்படும் மற்றும் அவர் தனிப்பட்ட நபர் என்ற முறையில் அதனை எடுத்துக்கொள்வார். இது தொடர்பாக, இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 4 குறித்த பரிசீலனையும் எங்கள் முன் வைக்கப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 4 சட்டத்தின் மேலோங்கும் திறனைப் பற்றிக் கூறுகிறது. சட்டத்தில் வேறுவிதமாக வெளிப்படையாக சொல்லப்பட்டுள்ளது தவிர, இச்சட்டத்தில் விதிகள் வகுக்கப்பட்டுள்ள விஷயங்களை பொறுத்து இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன் நடைமுறையில் இருந்த ஏதாவது மரபு அல்லது பயன்பாடு ஆகியவை அதன் செயல்பாட்டினை இழந்துவிடும். மேலும் இச்சட்டத்தில் கண்டுள்ள ஏதாவது விதிக்கு முரணாக இருக்கும் இச்சட்டத்திற்கு முன்பு நடைமுறையில் இருந்த எந்த ஒரு சட்டமும் இந்துக்களுக்கு பொருந்தும் தன்மையினை இழந்துவிடும். **பிரிவு 6, பங்குரிமையர் அமைப்பு சொத்தின் உரிமை பகிர்வு குறித்து கையாள்வதுடன், இச்சட்டம் அமலுக்கு வந்த பிறகு ஒரு இந்து ஆண் இறந்துவிட்டால், அவர் இறக்கும் போது மிதாக்ஸரா பங்குரிமையர் அமைப்பு சொத்தில் உரிமை பெற்றிருந்தால், சொத்தின் அவரது**

உரிமை பங்குரிமையர் அமைப்பில் உயிருடன் இருக்கும் உறுப்பினர்களுக்கிடையே எஞ்சுநர் உரிமை அடிப்படையில் தான் பகிர்ந்தளிக்கப்படும், இச்சட்டத்தின் படி அல்ல என்று தெளிவுபடுத்துகிறது. இறந்தவர் அட்டவணையின் வகுப்பு-I-ல் குறிப்பிடப்பட்டுள்ள பெண் உறவினரையோ அல்லது அவர்மூலம் உரிமை கோரும் அதே வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண் உறவினரையோ விட்டுச் சென்றிருந்தால் மிதாக்ஸரா பங்குரிமையர் அமைப்பு சொத்தில் இறந்தவரின் உரிமை எஞ்சுநர் உரிமையின்படி அல்லாமல் இந்த சட்டத்தின்படி உயில்வழி இறங்குரிமை அல்லது உயிலற்ற இறங்குரிமை ஆகியவற்றில் எது பொருந்துமோ அதன்படி பகிர்ந்தளிக்கப்படும் என வரம்புரை சுட்டிக்காட்டுகிறது.

மீண்டும் பத்தி 15ல்:

"15. இந்து சட்டத்தின்படி, ஒரு மகன் பிறந்த உடனயே அவரது தந்தையின் சொத்தில் பங்கு பெற்று பங்குரிமையர் அமைப்பின் அங்கமாகி விடுகிறார். அவரது உரிமை அவரது தந்தையின் மரணத்தினாலோ அல்லது தந்தையிடமிருந்து இறங்குரிமை மூலமோ கிடைக்கவில்லை. ஆனால் அவரது பிறப்பின் அடிப்படையிலேயே கிடைக்கிறது. பொதுவாக தந்தைக்கு தாத்தாவிடமிருந்து அல்லது வேறு எந்த மூலத்திலிருந்தும் சொத்து கிடைத்தாலும், அது பிரிக்கப்பட்ட சொத்தானாலும், இல்லாவிட்டாலும், மகனுக்கு அதில் பங்கு இருக்க வேண்டும், அது அவரது மகன், பேரன் மற்றும் இந்து கூட்டுக்குடும்பத்தை உருவாக்கும் பிற உறுப்பினர்களின் இந்து கூட்டுக்குடும்பத்தின் ஒரு அங்கமாக மாறும். ஆனால் கேள்வி என்னவெனில், இந்த நிலைப்பாடு இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8 ஆல்

பாதிக்கப்படுகிறதா? அப்படியானால் எப்படி? அடிப்படையான வாதம் என்னவென்றால், சில சொத்துக்களைப் பொறுத்தமட்டில் பிரிவு 8 வாரிசுகளை சுட்டிக்காட்டுகிறது மற்றும் வகுப்பு-I வாரிசுகள் மகனை உள்ளடக்கியது பேரனை அல்ல. இருப்பினும் முன்னமே இறந்த மகனின் மகனை அது உள்ளடக்கியுள்ளது. பாகப்பிரிவினையின் மூலம் பிரிக்கப்பட்ட தந்தையிடமிருந்து மகன் வாரிசு உரிமை யின்படி பெற்ற சொத்தில் இருந்து வரும் வருமானம் மகனின் தனிப்பட்ட வருமானமாக கருதப்பட வேண்டும் என்றும் இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ன் கீழ் ஏற்பாடு எதுவும் செய்து வைக்காமல் இறந்துவிட்ட தந்தையின் சொத்து அவரது மகனுக்கு தனிப்பட்ட நபர் என்ற முறையில் தான் பகிர்ந்தளிக்கப்படுமே தவிர அவரது சொந்த குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் அல்ல என்றும், பார்வையை எடுக்க மேற்படி நிலைப்பாடுகள் முக்கிய தூண்டுதலாக இருந்துள்ளது என்பதை கவனத்தில் கொண்டோம். மறுபுறம் குஜராத் உயர்நீதிமன்றம் இதற்கு நேர்மாறான கருத்தை கொண்டுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றம், மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு, மத்திய பிரதேசம் மற்றும் ஆந்திரபிரதேசம் உயர்நீதிமன்றங்கள் ஒருபுறமும், குஜராத் உயர்நீதிமன்றம் ஒருபுறமும் தெரிவித்த மாறுபட்ட கருத்துக்களை பரிசீலித்த பின், அது பின்வருமாறு கருத்த தெரிவித்தது.

"21. இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956ன் முன்னுரையை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இந்துக்களிடையே உயிலற்ற இறங்குரிமை தொடர்பான சட்டங்களை திருத்தவும் தொகுப்பதற்கான சட்டம் என்று முகப்புரை கூறுகிறது.

22. சட்டத்தின் முகப்புரையின் பார்வையில், அதாவது தேவையான இடத்தில் மாற்றியமைப்பது மற்றும் சட்டத்தை தொகுப்பது. எங்களது கருத்துப்படி அட்டவணை வகுப்பு-Iவாரிசுகளில் மகன் சேர்க்கப்பட்டு மகனின் மகன் சேர்க்கப்படாமல் முன்னமே இறந்த மகனின் மகன் சேர்க்கப்பட்டுள்ளதால் பிரிவு8ல் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் படி மகன் சொத்தினை பெறும்போது அவர் அதை தனது சொந்த பிரிக்கப்படாத குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் பெறுவார் என்று கூறுவதற்கு சாத்தியமில்லை. **மேலே குறிப்பிட்டவாறு குஜராத் உயர்நீதிமன்றத்தின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டால், பிரிவு 8ல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு முரணாக, பிரிவு 8 ஆல் விலக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிற மகனின் மகன் தான் பழைய இந்து சட்டத்தை சுட்டிக்காட்டி பிறப்பின் மூலம் உரிமை பெறுவார், முன்னமே இறந்த மகனின் மகன் அல்ல.**மேலும் ஆந்திரபிரதேச உயர்நிதிமன்றம், பிரிவு 4ன் மூலமாக சந்தேகம் எதுவும் எழும்போது ஒருவர் சட்டத்தைத்தான் பார்க்க வேண்டுமே தவிர ஏற்கனவே நடைமுறையில் இந்து சட்டத்தை அல்ல என்று இந்த சட்டம் தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ன் கீழ் ஒரு இந்துவுக்கு பகிர்ந்தளிக்கப்படும் சொத்து அவரது கைகளில் அதனால் அவரது மகனின் கைகளில் இந்து பிரிக்கப்படாத குடும்பமாக இருக்கும் என்று இன்று தீர்மானிப்பது கடினமானதாக இருக்கும். அது வகுப்பு-I ல் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளுக்கிடையே இரு பிரிவுகளை உண்டாக்குவதாகும். ஆண்வாரிசுகளின் கைகளில் அது இந்து கூட்டுக் குடும்பச் சொத்தாக இருக்க வேண்டும் மற்றும் பெண்

வாரிசுகளைப் பொறுத்தவரை அத்தகைய கருத்தை பொருத்திப் பார்க்கவோ, பயன்படுத்தவோ முடியாது. **சட்டத்தின் பிரிவு 8ன் கீழான அட்டவணையின் வகுப்பு-Iல் வாரிசுகளில் விதவை தாய், முன்னமே இறந்த மகனின் மகள் ஆகியோரும் அடங்குவர் என்று குறிப்பிடலாம்.**

23. முடிப்பதற்கு முன் இந்து சட்டத்தின் மீதான முல்லாவின் விளக்கவுரையின் 15வது பதிப்பின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 6ஐ கையாளும் 924முதல் 926 வரையிலான பக்கங்கள் மற்றும் இந்து சட்டத்தின் மீது மெய்ன் 'ஸ் ன் 12வது பதிப்பின் 918முதல் 919 வரையிலான பக்கங்களில் உள்ள கருத்துக்களை நாங்கள் குறிப்பிட்டதை கூற வேண்டும்.

24. இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8ன் வெளிப்படையான வார்த்தைகளை புறக்கணிக்க முடியாது மற்றும் அது மேலோங்கி நிற்க வேண்டும். இந்தச் சட்டத்தின் முன்னுரை மற்றவற்றிற்கு இடையே சட்டத்தை திருத்தம் செய்வதாக வலியுறுத்துகிறது. அதன் பின்னனியில் மகனின் மகனை விலக்கி, முன்னமே இறந்த மகனின் மகனை உள்ளடக்கிய வெளிப்படையான மொழியை புறக்கணிக்க முடியாது. "

(வலியுறுத்தி வழங்கப்பட்டுள்ளது**)**

இந்த முடிவு **யுதிஷ்டரில்**(மேலே கண்டபடி) ஒப்புதலுடன் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் 10வது பத்தியில் நீதிமன்றம் இவ்வாறு குறிப்பிட்டது :

“10. இந்த கேள்வியை இந்நீதிமன்றம் செல்வ வரி ஆணையர் - எதிர் - சந்தர்சென் வழக்கில் பரிசீலித்தது. அதில் எங்களில் ஒருவர் (சப்யசாச்சி முகர்ஜி.ஜே) இந்து சட்டத்தின் படி ஒரு மகன் பிறந்த உடனேயே, அவரது தந்தையின் சொத்தில் பாகம் பெற்று, பங்குரிமையர் அமைப்பில் ஒரு அங்கமாகிறார் என்பதை கவனத்தில் கொண்டார்.அவரது உரிமை அவரது தந்தையின் மரணத்தினாலோ அல்லது தந்தையிடமிருந்து மரபுரிமை மூலமோ கிடைக்கவில்லை. ஆனால் அவரது பிறப்பின் அடிப்படையிலேயே கிடைக்கிறது. பொதுவாக தந்தைக்கு தாத்தாவிடமிருந்து அல்லது வேறு எந்த மூலத்திலிருந்தும் சொத்து கிடைத்தாலும், அது பிரிக்கப்பட்ட சொத்தானாலும், இல்லாவிட்டாலும், மகனுக்கு அதில் பங்கு இருக்க வேண்டும், அது அவரது மகன், பேரன் மற்றும் இந்து கூட்டுக்குடும்பத்தை உருவாக்கும் பிற உறுப்பினர்களின் இந்து கூட்டுக்குடும்பத்தின் ஒரு அங்கமாக மாறும். இந்த நிலைப்பாடு இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ஆல் பாதிக்கப்படுவதை இந்நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டது. எனவே இச்சட்டத்திற்கு பிறகு பிரிவு 8ல் விளக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் கீழ் மகன் சொத்தினை பெறும்போது, அவர் அதனை அவரது சொந்த பிரிக்கப்படாத குடும்பத்தின் கர்த்தாவாக பெறமாட்டார். ஆனால் தனிப்பட்ட நபர் என்ற முறையில் பெறுவார். அறிக்கையின் பக்கம் 577முதல் 578ல் இந்நீதிமன்றம் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956பிரிவு 6ன் விளைவுகளை கையாண்டது மற்றும் முல்லாவின் விளக்கவுரை 15வது பதிப்பின் 924 முதல் 926 வரையிலான பக்கங்களும், மெய்ன்'ஸ் இந்து சட்டம் 12வது பதிப்பின் 918முதல் 919வரையிலான பக்கங்களும்

கையாளப்பட்டது. ஸ்ரீ பானர்ஜி, மெய்ன் இந்து சட்டம் 15வது பதிப்பின் 918முதல் 919 வரையிலான பக்கங்களில் உள்ள கருத்துக்களை மேற்கோள் காட்டினார். இந்நீதிமன்றம் மேற்படி தீர்ப்பில் அலகாபாத் உயர்நீதிமன்றம் , மெட்ராஸ் நீதிமன்றம், மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் மற்றும் ஆந்திர பிரதேச உயர்நீதிமன்றம் வெளிப்படுத்திய கருத்துகள் சரியானவை என்றும், குஜராத் உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களை ஏற்க இயலவில்லை என்றும் கருத்து தெரிவித்தது. மெய்ன்'ஸ் இந்து சட்டம், 15வது பதிப்பு, பக்கம் 919ன் கற்றறிந்த ஆசிரியரின் கருத்தும் இதே போன்ற விளைவைக் கொண்டுள்ளது. பொருளின் அந்தப் பார்வையில் இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ன் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் சொத்து அவரது மற்றும் அவரது சொந்த மகனின் கைகளில் இருக்கும் இந்து பிரிக்கப்படாத குடும்பம் என்று தீர்மானிப்பது கடினமானதாக இருக்கும். அது நிலைப்பாடாக இருந்தால் தற்போதைய வழக்கின் எதிர்மனுதாரரின் தந்தைக்கு அவரது தாத்தாவின் மரணத்திற்கு பிறகு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள சொத்தினை இந்து பிரிக்கப்படாத குடும்ப சொத்து என்று கூற இயலாது. அப்படியானால், பூர்வீக வீட்டை பொறுத்த மட்டில், எதிர்மனுதாரர் அவரது தந்தையிடம் உரிமம் பெற்றவர் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருப்பது சரியானது. ”

18. எதிர்மனுதாரர்களின் தந்தை உயிருடன் இருக்கும் வரை வாதிகள் எவ்வித உரிமையும் கேட்கமுடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் வாதிகளின் வழக்கினை நிராகரிப்பதற்காக மேற்படி தீர்ப்பினை பின்பற்றி சந்திராகாந்தா (மேலே கண்டபடி) வழக்கில் மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பு எதிர்மனுதாரர்களால் எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

19. தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்கு திரும்புகையில், சஹ்தியோ பூர்வீக சொத்தைப் பெற்றிருந்தார்என்பதும் அவர் 1965ம் ஆண்டுவரை உயிருடன் இருந்தார் என்பதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. மேல்முறையீட்டார்களின் தந்தை சாகேப்லால் அவருக்கு முன்பு 1957ம் ஆண்டு இறந்துவிட்டார். சாகேப் லால் ஜனக்ராமின் மகனாவார். ஜனக்ராம் 1982ம் ஆண்டு இறந்துவிட்டார். ஜனக்ராமின் வழியாகத்தான் உரிமை கோர முடியும் என்பதால் ஜனக்ராமின் ஆயுள்காலத்தின் போது, 1956 சட்டத்தின் பிரிவு 6ன் விதிகளின் படி சாகேப்லால் சொத்தினை பெற்றிருக்க முடியாது. ஜனக்ராம் 1982ம் ஆண்டு வரை உயிருடன் இருந்துள்ளார். சாகேப்லால் அவரே அவரது சொந்த உரிமையில் எந்த உரிமையும் கோரவில்லை எனில், அவரது மகளாக இருக்கும் மேல்முறையீட்டாளர், சொத்தைப் பெறுவது குறித்த கேள்வி எழாது.

20. மூன்று நீதிபதிகள் அமர்வு உட்பட, இந்நீதிமன்றத்தின் நிலையான பார்வை யாதெனில், பேரன் அல்லது பேத்தி வகுப்பு-I வாரிசுகளிலிருந்து தெளிவாக விலக்கப்பட்டுள்ளனர். சாகேப்லால் சஹ்தியோவின் பேரனாவார். அவர் சஹ்தியோவிற்கு முன்பே இறந்துவிட்டார். 1965ஆம் ஆண்டு சஹ்தியோவின் மறைவுக்கு பிறகு, பூர்வீகச் சொத்தைப் பொறுத்து ஜனக்ராம் மற்றும் பிலராமிற்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது. அந்த பாகப்பிரிவினையின் விளைவாக, தாவாச் சொத்து ஜனக்ராமின் தனிப்பட்ட பங்கிற்கு வந்தது. எனவே அவர் விரும்பியபடி சட்டப்படி சொத்தினை விற்பனை செய்யலாம் என்பதால் 21/07/1979ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலமாக அவரது பேரன்களுக்கு (முறையே 1 முதல் 3 பிரதிவாதிகள்) விற்பனை செய்துள்ளார். 1967ல் நடந்ததாக கூறப்படும் பாகப்பிரிவினை அல்லது 21/07/1979ம் தேதியிட்ட எதிர்மனுதாரர்களுக்கு (1 முதல் 3பிரதிவாதிகள்) ஆதரவாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் எதிர்க்கப்படவில்லை. மேல்முறையீட்டாளர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் அவருக்கு தாவாச் சொத்தினை பாகம் பிரித்து அவரது பங்கினை சுவாதீனத்துடன் வழங்க கோரி பரிகாரம்

கோரப்பட்டுள்ளது. ஜனக்ராமின் பேத்தி (மேல்முறையீட்டாளர்) அவரது தந்தை சாகேப்லாலாவின் உரிமையை விட மேலான உரிமையைக் கோர இயலாது என்பதை மட்டும் கவனித்தால் போதும்.

21. இந்நீதிமன்றம் **குருபாத் கந்தப்பா மக்தும்**(மேலே கண்டபடி)வழக்கில் பிறப்பித்துள்ள தீர்ப்பின் மீதான மேல்முறையீட்டாளரின் நம்பிக்கை பொருத்தமற்றது. அந்த வழக்கில், வாதி, வகுப்பு-I வாரிசு என்பதால், அவரது கணவர் இறந்தபோது பங்குரிமையர் அமைப்பு சொத்தில் அவருக்கிருந்த உரிமையில் பங்கு இருப்பதாக கூறினார். இந்த விஷயத்தை பொறுத்தவரை, 1956சட்டம் பிரிவு 6ன் வரம்புரையின் படி, பங்குரிமையர் அமைத்து சொத்தில் அவரது கணவருக்கு இருந்த உரிமை 1956 சட்டத்தின் கீழ் இறங்குரிமையின் படி பகிர்ந்தளிக்கப்படும். அதேபோல், **ராஜ்ராணி**(மேலே கண்டபடி) வழக்கில், இறந்த நபரின் விதவை, மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்களுக்கு இடையேயான தகராறில், பிரச்சனைக்குரிய சொத்து மிதாக்ஷரா பங்குரிமையர் அமைப்பு சொத்து என்பதாலும், அவர்கள் வகுப்பு-Iவாரிசுகள் என்பதாலும் 1956சட்டம் பிரிவு 6ன் விளக்கம் Iன் படி இறந்தவரின் உரிமையில் சமபங்கு பெற உரிமையுடையவர்கள் என்று தீர்மானிக்க இந்நீதிமன்றம் அழைக்கப்பட்டது. அந்த பரிசீலனையை அறிக்கையிடப்பட்ட தீர்ப்பின் பத்தி17ல் இருந்து அறியலாம். **ரமேஷ் வர்மா**(மேலே கண்டபடி) வழக்கில் இந்நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு கூட மேல்முறையீட்டாளரின் வழக்கினை மேலும் எடுத்துச் செல்லவில்லை. அந்த வழக்கில் கூட பகவன்தாஸ் மறைவிற்கு பிறகு வகுப்பு-Iல் கண்ட வாரிசுகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது. 1956 சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, கருத்தியல் பாகப்பிரிவினை நடைபெற்று மத்திய பாரத நிலச்சட்டம் பிரிவு 82ன் படி அவரது மகன்கள் மற்றும் மனைவி சொத்தில் 1/3பங்கைப் பெற உரிமை பெற்றனர். பாகப்பிரிவினையில் மகன்களில் ஒருவருக்கு பங்கு கிடைக்கப்பெற்று அது அவரது தனிப்பட்ட சொத்தாக மாறிய பிறகு மிதாக்ஸரா சொத்தாக தொடர முடியாது. இந்த பொருண்மை நிலைப்பாட்டினை அறிக்கையிடப்பட்ட தீர்ப்பின் பத்தி11ல் இருந்து அறியலாம்.

22. முதன்மையாக, 1965ம் ஆண்டு சஹ்தியோ இறந்த பிறகு, சொத்து அவரது இரு மகன்களான ஜனக்ராம் மற்றும் பிலராம் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்ற உயர்நீதிமன்றத்தின் பார்வையை நாங்கள் ஆதரிக்கிறோம். அவர்கள் பூர்வீக சொத்தினை சமமாக பெற்றுள்ளார்கள். அவர்கள் பின்னர் 1967ம் ஆண்டு பாகப்பிரிவினையை மேற்கொண்டனர். அதன் விளைவாக சொத்து ஜனக்ராமின் பிரத்யேக பங்கிற்கு வந்தது. மேல்முறையீட்டாளரின் தந்தை சாகேப்லால் அவரது தந்தை ஜனக்ராம் மற்றும் தாத்தா சஹ்தியோவிற்கு முன்பே இறந்துவிட்டார். ஜனக்ராமின் வாழ்நாளில், சாகேப்லால் சொத்தினை பெற்றிருக்க முடியாது மற்றும் அதே காரணத்திற்காக மேல்முறையீட்டாளர் சாகேப்லாலின் மகளாக இருந்துகொண்டு சாகேப்லாலின் உரிமையை விட உயர்ந்த எந்த உரிமையையும் கோர முடியாது. இந்த வழக்கிற்கு தீர்க்கப்பட்ட சட்ட நிலைப்பாட்டினை பொருத்துவதன் மூலம், மேல்முறையீட்டாளரால் வலியுறுத்தப்பட்ட காரணங்கள் நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

23. அதன்படி, இந்த மேல்முறையீடு தோல்வி அடைய வேண்டும். எனவே செலவுத்தொகை குறித்து எவ்வித உத்தரவும் இன்றி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

24. நிலுவையில் உள்ள அனைத்து மனுக்களும் மேற்கண்ட தீர்ப்பின் படி முடித்து வைக்கப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும்

பயன்படுத்திகொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."